6th September 1960]

Sri N. R. THIAGARAJAN : ஸார், "மதுரை ஜில்லாவில் மராமத்துப் பணிகள்" என்ற புத்தகத்தில் பல்வேறு குளங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில் எந்த இடத்திலும் வேலை நடைபெறவில்லை. இந்த வேலைகள் நடைபெறுகின்றனவா, இனியாவது நிறைவேற்றத் திட்டமிடப் பட்டிருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : கண்மாய்களைச் செப்பனிடத் திட்டமிடும்போது, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழும், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் திட்டத்தின் கீழும் திட்டமிட்டு மராமத்து இலாகாவினர் நேரடியாகவே அந்தக் கண்மாய்களைச் செப்பனிட ஏற்பாடு செய்து வருகிறார்கள். சில வேலைகள் முடிந்திருக் கின்றன; சில வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; இன்னும் சில வேலைகள் இனிமேல் எடுத்துக் கொள்ளப்படும்.

Agricultural holdings

* 461 Q.—Sri T. SAMPATH : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether a survey of agricultural holdings in our State was done in 1954 by Food and Agricultural Organization;

(b) if so, whether details of such survey will be placed on the table of the House ; and

(c) whether a similar survey would be conducted now?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :

(a) No, Sir.

(b) & (c) Do not arise.

Sri T. SAMPATH : May I know, Sir, whether the Government are going to conduct such a survey now?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I don't think such a survey is necessary.

Official language

* 462 Q.—Sri M. P. SUBRAMANIAM (on behalf of Sri P. U. SHANMUGAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய ஜனாதிபதி மொழிக் குழு அறிக்கையின் மீது, தமது உத்திரவைப் பிறப்பிக்கும் முன் இந்த மாநில அரசாங் கத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டாரா ?

(ஆ) அப்படியானால், இம் மாநில அரசாங்கம் என்ன அபிப் பிராயம் தெரிவித்துள்ளது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

(Sri M. P. Subramaniam rose . . .)

Mr. SPEAKER : We had a whole day discussion on this issue yesterday. Does the hon. Member want to put some more supplementaries to-day also?